வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 28.08.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை உஸ்பெகிஸ்தானுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டம், தொடங்கப்பட்டு இன்றுடன் 12 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது.

நேபாளம், திபெத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 469-ஆக உயர்ந்துள்ளது.

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கிடைக்கும் என்றால், தனது முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்யவும் தயார் என்று திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

மோடி (19)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை உஸ்பெகிஸ்தானுக்கு பயணம் மேற்கொள்கிறார். இந்த 2 நாள் பயணத்தின் போது, அவர் உஸ்பெகிஸ்தான் அதிபர் திரு. Shavkat Mirziyoyev-வை சந்தித்து, இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான, பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, உஸ்பெகிஸ்தானுக்கு பயணம் மேற்கொள்வது இது 4ஆவது முறையாகும். அங்குள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின், சர்வதேச ஆய்வுகள் பள்ளியில், மத்திய ஆசிய ஆய்வுகள் துறையின் பேராசிரியரான திரு. ராஜன் குமார் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த இரு தலைவர்களிடையே நிகழும் இந்த சந்திப்புகள் உஸ்பெகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும், இடையே உள்ள ஆழமான உறவுகளை எடுத்துக்காட்டுவதாக கூறினார். இந்தப் பயணத்தின்போது, பிரதமர் திரு. நரேந்திர மோடியும், அந்நாட்டு அதிபர் திரு. Shavkat-ம் வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு, டிஜிட்டல் இணைப்பு, எரிசக்தி, கல்வி, மற்றும் மக்கள் தொடர்பு துறைகளில் ஒத்துழைப்பை ஆய்வு செய்து, எதிர்காலத்திற்கான செயல் திட்டங்கள் குறித்து விவாதிக்க உள்ளனர். மேலும், விக்சித் பாரத் 2047 மற்றும் உஸ்பெகிஸ்தான் 2030 ஆகியவற்றின் பகிரப்பட்ட வளர்ச்சி, தொலைநோக்குப் பார்வைகளை, முன்னெடுத்துச்

செல்வது குறித்த கண்ணோட்டங்களையும் அவர்கள் கலந்தாலோசிக்க உள்ளனர்.

**ஜன்தன் -1 (06)**

பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டம், தொடங்கப்பட்டு இன்றுடன் 12 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. கடந்த 12 ஆண்டுகளில், இணையற்ற தாக்கத்துடன், முன் எப்போதும் இல்லாத அளவிலான மாற்றத்தை, இந்த ஜன்தன் யோஜனா திட்டம் வழங்கியுள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இது குறித்த கூடுதல் தகவல்கள் …

**ஜன்தன் – 2 வாய்ஸ் (19)**

நாடு முழுவதும், நிதி மேலாண்மை மற்றும் மக்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவற்றில் ஜன்தன் யோஜனா திட்டம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இத்திட்டத்தின் மூலம் அரசின் மானியங்கள், நலத்திட்ட உதவிகள், நேரடியாக மக்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருவதாக, பிரதமர் கூறியுள்ளார். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 59 கோடிக்கும் அதிகமான கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன என்றும், இதன் மூலம் மொத்த வைப்புத் தொகை 3 லட்சத்து 17ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் 2014ஆம் ஆண்டு, இதே நாளில் தொடங்கப்பட்டு, உலகின் மிகப்பெரிய நிதி உள்ளடக்க முயற்சியாக, அனைத்து இந்தியர்களுக்கும், வங்கி சேவைகளை எளிதாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இத்திட்டத்தின் கீழ் 78 சதவிகித கணக்குகள், கிராமப்புறம் அல்லது பகுதி நகர்ப்புறங்களில் தொடங்கப்பட்டுள்ளன. தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், வளர்ச்சியடைந்த இந்தியவிற்கான அடித்தளத்தை, பிரதமரின் வங்கி கணக்கு திட்டம் உறுதி செய்துள்ளது என்றும், கோடிக்கணக்கான மக்களின் நிதி பாதுகாப்பை பிரதமரின் ஜன் தன் திட்டம் வகுத்து தந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**ரக்ஷா பந்தன் – 1 (17)**

ரக்ஷா பந்தன் கொண்டாட்டத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மற்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இன்று புதுடெல்லியிலுள்ள பல்வேறு பள்ளிகள், மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த குழந்தைகள், மற்றும் மாணவர்களுடன் கொண்டாடினர்.

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், ரக்ஷா பந்தனின் முக்கியத்துவம், உடன்பிறப்புகளின் பந்தங்களை தாண்டிய பிணைப்பு என்றும், ரக்ஷா பந்தன் என்னும் புனித நூலை, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் மரங்களில் கூட கட்டலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணை தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அன்பு, நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அழகான உறவைக் குறிப்பது ரக்ஷா பந்தன் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த பண்டிகை பாசம், மற்றும் நல்லிணக்க பிணைப்புகளை ஆழப்படுத்தி அனைவருக்கும் மகிழ்ச்சியையும், செழிப்பையும் கொண்டுவர வேண்டும் என்று கூறியுள்ளார்.

## ரக்ஷா பந்தன் – 2 (06)

இதனிடையே, பஞ்சாப் மாநிலம், அம்ரித்சரில், ரக்ஷாபந்தனை ஒட்டி இன்று நடைபெற்ற விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில், மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் பங்கேற்றார். அம்ரித்சரில் உள்ள பொற்கோவிலில், நாட்டிற்காகவும், பஞ்சாப் மாநில வளர்ச்சிக்காகவும், நடைபெறும் சேவா பூஜையிலும் அவர் கலந்து கொண்டார்.

## சமஸ்கிருத தினம் (12)

உலக சமஸ்கிருத தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இத்தினத்தை ஒட்டி குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் இந்தியாவின் அறிவாற்றலைக் கொண்டு செல்லும் பணியை சமஸ்கிருதம் காலம் கடந்து செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தத்துவம், நாகரிகம், கலாச்சார பாரம்பரிய அறிவாற்றல் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சமஸ்கிருதம் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள உலக சமஸ்கிருத தின வாழ்த்துச் செய்தியில், இந்தியாவின் பாரம்பரிய சிந்தனையையும், ஆக்கத் திறனையும், அறிவாற்றலையும், சமஸ்கிருதம் மக்களுக்கு எடுத்துச் செல்வதாக குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும், சமஸ்கிருத மொழியை அதிக அளவில் மக்கள் கற்று வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

## நிர்மலா சீதாராமன் (13)

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், 6 நாள் பயணமாக இன்று அமெரிக்கா செல்கிறார். முன்னதாக, டொரண்டோவில் கனடா நிதியமைச்சர் திரு. பிரான்சுவா பிலிப் உடனான பேச்சுவார்த்தைக்குப் பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இதில் ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிதித்துறை சார்ந்த பிரச்சனைகளில், ஆழமான ஒத்துழைப்பு குறித்தும் இரு அமைச்சர்களும் விவாதித்தனர். இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க இந்தியா தயாராக உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். மேலும், 2030ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு

வர்த்தகத்தை 70 பில்லியன் கனடா டாலராக உயர்த்துவது என்றும், நிதியமைச்சர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நேபாளம் – 1 (13)

நேபாளம், திபெத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 538-ஆக உயர்ந்துள்ளது. எல்லையின் இருபுறமும், ஆயிரத்து 545 பேர் இன்னும் காணவில்லை என்றும், அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்புக் குழுக்கள் ஆற்றங்கரைகளிலும், தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகளிலும், உயிர்பிழைத்தவர்களைத் தேடியும், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட உடல்களை மீட்டும் வருகின்றனர். இருப்பினும், போதே கோஷி நதி அமைப்பின் மூலத்திற்கு அருகில் புதிதாக உருவான தடுப்பு ஏரி குறித்தும், அதில் ஏற்படும் உடைப்பு மற்றொரு நீர் பெருக்கத்தை தூண்டி, பேரழிவை மேலும் தீவிரமாக்கி, மீட்பு பணிகளுக்கு தடையாக அமையக்கூடும் என்றும், அதிகாரிகள் அஞ்சுகின்றனர். நேபாள பாதுகாப்பு படையினர், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து 800க்கும் மேற்பட்டோரை வெளியேற்றி உள்ளனர்.இது குறித்த கூடுதல் தகவல்கள்…

நேபாளம் – 2 வாய்ஸ் (17)

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து இந்தியா மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைளை தொடங்கியுள்ளது. நேபாளத்திலுள்ள 290 இந்தியர்களை தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் அவர்களைக் கண்டறிந்து மீட்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும், வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுவரை திரிசூலி-1 ஆற்று மின் திட்டத்தின் 63 தொழிலாளர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 பேர் உட்பட 84 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். நேபாள அரசின் பிற அமைச்சகங்கள், மாநில அரசுகள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமைச்சகம் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். காத்மாண்டு மற்றும் பெய்ஜிங்கில் உள்ள இந்திய தூதரகங்கள், இந்தியர்களின் நிலை மற்றும் நல்வாழ்வு குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்கியதாக திரு. ஜெய்சங்கர் தமது ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். தேடுதல் மற்றும் வெளியேற்றும் முயற்சிகளுக்கு உதவுவதற்காக 24 மணி நேர கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளம் – 3 (04)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேபாள பிரதமர் திரு. பலேந்திர ஷாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நிலவரம் குறித்து கேட்டறிந்து, மனிதாபிமான உதவிகளை இந்தியா அளிக்கும் என்று உறுதியளித்துள்ளார்.

புதுச்சேரி (20)

புதுச்சேரி சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடரில் இன்று, புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கிடைக்கும் என்றால், தனது முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்யவும் தயார் என்று திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார். சட்டப்பேரவையில் பாஜக சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜான் குமார் பேசுகையில், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் டெல்லிக்குச் செல்ல வேண்டும் என்றும், சட்டமன்ற பதவியை ராஜிநாமா செய்ய தயாராக உள்ளதாகவும் கூறினார். தொடர்ந்து, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்ய தயாராக உள்ளதாகவும் கூறினர். முன்னதாக, சமூக விரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்ட முன் வரைவை, உள்துறை அமைச்சர் திரு.நமசிவாயம் தாக்கல் செய்ய முயன்றார். அப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு வேலைவாய்ப்பில் மோசடி, மணல் திருட்டு, சீட்டு மோசடி ஆகியவற்றை இந்த சட்ட மசோதாவில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு குற்றச் சம்பவங்களை சுட்டிக்காட்டினர். பின்னர், சட்டப்பேரவைத் தலைவர் திரு. அன்பழகன் இந்த சட்டத்தின் மீது உறுப்பினர்கள் விவாதம் நடத்தி, முதலமைச்சர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோரின் அனுமதியோடு, முழு சட்ட திருத்தம் பேரவையில் நிறைவேற்றப்படும் என்றும், அதுவரை இந்த சட்ட திருத்தத்தை நிறுத்தி வைப்பதாகவும் அறிவித்தார்.

விளையாட்டு (17)

அமெரிக்காவில் நடைபெற்ற கிராண்ட் செஸ் போட்டியின் இந்தியாவின் பிரக்ஞானந்தா இறுதிப் போட்டியில் நடப்பு சாம்பியன் Fabino Caruana-வை, வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் பிரக்ஞானந்தாவிற்கு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரேசிலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கிரிஷா மகேந்திரன்—அமெரிக்காவின் Virginia Crocker இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

Taipei-யில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் நிதின்குமார் சின்ஹா—மனீஷ் இணை 6-3, 7-5 என்ற செட் கணக்கில் தைவான் இணையை வீழ்த்தி, இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆசியக் கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டி, துபாயில் இன்று தொடங்குகிறது. வரும் 13ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில், இந்தியா உட்பட 8 அணிகள் பங்கேற்க உள்ளன. இந்தியா, தனது முதல் ஆட்டத்தில் நாளை மறுநாள் தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

**சர்க்கரை (15) 178**

நாட்டில் சர்க்கரைக்கு பற்றாக்குறை இல்லை என்றும், நியாயமான விலையில் போதுமான அளவு சர்க்கரை கிடைப்பதை உறுதிசெய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும், மத்திய அரசு தெரிவித்துள்ளது. அண்மையில் ஆலை சர்க்கரை விலை சுமார் 20 சதவீதம் குறைந்துள்ளதாகவும், சில்லறை சர்க்கரை விலைகளும் குறையத் தொடங்கியுள்ளதாகவும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் சர்க்கரை விலை, கையிருப்பு மற்றும் அதன் நகர்வுகளை மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. புதிய பருவத்திற்கான கரும்பு அரவை அக்டோபர் 15 ஆம் தேதி தொடங்கும் என்றும், இந்த மாதத்தில் 10 லட்சம் டன்களுக்கும் அதிகமான சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. நவம்பர் மாதத்தில் சர்க்கரை உற்பத்தி சுமார் 45 லட்சம் டன்னாக இருக்கும் என்றும், இது உள்நாட்டு நுகர்வுக்குக் கணிசமான கூடுதல் விநியோகத்தை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது,

**மீண்டும் தலைப்புச் செய்திகள்**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை உஸ்பெகிஸ்தானுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டம், தொடங்கப்பட்டு இன்றுடன் 12 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது.

நேபாளம், திபெத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 469-ஆக உயர்ந்துள்ளது.

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கிடைக்கும் என்றால், தனது முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்யவும் தயார் என்று திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.